## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 39/2015 | வா.சா | 1 |
| பெயர் : | சோலையம்மாள் | க/பெ | ராஜேந்திரன் |
| தாலுகா : | நத்தம் | கிராமம் | ஏரக்காபட்டி |
| தேதி : | 08.01.2024 | வயது | 50/2024 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம் :

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 11.10 A.M. – 11.17 A.M.

**வாதிகள் தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி**

2. நான் ஏற்கனவே எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்து வா.சா.ஆ.1 மற்றும் வா .சா.ஆ.2 ஆவணங்களை குறியீடு செய்துள்ளேன் . தற்போது எனது வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள இதர ஆவணங்களை வாதிகள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

வா.சா.ஆ.3 – 18.12.2023 தேதியிட்ட 1379 பசலி ஆண்டிற்கான அடங்கல் – உண்மை நகல்.

வா.சா.ஆ.4 – 18.12.2023 தேதியிட்ட 1395 பசலி ஆண்டிற்கான அடங்கல் – உண்மை நகல்.

வா.சா.ஆ.5 – 30.07.1973 தேதியிட்ட நல்லியப்பன் குமாரர்கள் அழகம்மாள் என்பவரிடமிருந்து பெற்ற கிரைய ஆவணம் – சான்றிட்ட நகல் (ஆவண எண். 1977/1973)

மேற்கண்ட ஆவணங்கள் வா.சா.ஆ.3 முதல் 5 வரை குறியீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட எனது சாட்சி மற்றும் சான்றாவணங்களை ஏற்றுக்கொண்டு வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**5ம் பிரதிவாதி தரப்பு குறுக்க விசாரணைக்காக வழக்கு வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது. 1 முதல் 4 மற்றும் 6ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 08.01.2024 கையெழுத்து செய்துள்ளார்.

V UDAYASURIYA
Digitally signed by V UDAYASURIYA
Date: 2024.01.08 10:44:13 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்